# குளித்தலை நகராட்சி

28.03.2018.ஆம் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற
அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் திருத்தம் செய்து பிரசுரம் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசிதழ் எண்.33, நாள்–25.01.2018.ன்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள்மீது சொத்துவரி விதிக்கப்படவேண்டும். மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டுவரும் நிறுவனங்கள், சுயநிதி படிப்புகளை நடத்திவருமாயின், அக்கட்டிடங்கள்மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், குளித்தலை நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)–க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்களிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவ 83(1)(சி)–க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)–க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்திவரும்பட்சத்தில், அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும், கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்திவரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின்மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்துவரியாக விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி).க்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரையாண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78(3).ன்படி ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்.1040/2018/அ1)

பொருள்– 02.

குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு பொதுப்பணி மேற்பார்வையாளர் திரு.கே.வி.மாரிமுத்து, பணிமூப்பு பட்டியலில் ஆட்சேபணை தெரிவித்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு WP(MD) எண்.1426/2018.ல் தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்த திரு.எம்.ராஜராஜன், பி.ஏ., பி.எல்., அரசு வழக்கறிஞர், வழக்காடு கட்டணம் ரூ.10000/– கோரியுள்ளார். மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1103/2017/சி1)

பொருள்– 03.

குளித்தலை நகராட்சி நாப்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் திரவ குளோரினேசன் செய்ய, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ், திரவ குளோரினேசன் இயந்திரம் M/s.PRG.கன்ஸ்ட்ரக்சன், கரூர்மூலம் அமைக்கப்பட்டதற்கு ரூ.4,58,395/–க்கு செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளப்பட்டதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2462/2017/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி பெரியார்நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் திரவ குளோரினேசன் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் திரவ குளோரினேசன் இயந்திரம் M/s.PRG.கன்ஸ்ட்ரக்சன், கரூர்மூலம் அமைக்கப்பட்டதற்கு ரூ.4,35,629/–க்கு செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளப்பட்டதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2461/2017/இ1)

பொருள்– 05. கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ2/15525/2017, நாள்–15.11.2017 மற்றும் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.105/2017/அ3, நாள்–03.01.2018.ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, குளித்தலை நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு (42–எண்ணம்) நிழற்பட அடையாள அட்டை(ID Card) தயார் செய்து வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டதின்பேரில், 02.02.2018 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1) | JENITH COPIER, 1, Lakshmi Complex, Opp Bus Stand, Kulithalai. | 42 | 4200.00 |
| 2) | தீபம் பிரிண்டர்ஸ், பயணியர் விடுதி அருகில், குளித்தலை. | 42 | 4620.00 |
| 3) | P.K.Prints & Ads, Designing Printing Advertisement, Karur | 42 | 5040.00 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரூ.4200/– அளித்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள JENITH COPIER, Opp Bus Stand, Kulithalai என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, சப்ளை உத்தரவு வழங்கியதற்கும், செலவினத்தை பொது நிதியில் வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய JENITH COPIER, Opp Bus Stand, Kulithalai என்ற நிறுவனத்தின்மூலம் பணிசெய்து முடித்தமைக்கும், செலவினத்தை பொதுநிதியில் வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2967/2017/சி1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான பொருட்கள் அரசாணை(நிலை) எண்.118, நாள்–26.09.2014.ல் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், மேலும், அரசாணை(ப)எண்.121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.1)துறை, நாள்–17.01.2013.ல் தெரிவித்துள்ளதாலும், கீழ்க்கண்ட விபரப்படி 2018–2019.ஆம் ஆண்டுக்குரிய (01.04.2018 முதல் 31.03.2019 வரை) பொருட்கள் வாங்கி அம்மா உணவகத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.55.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | அரிசி | = | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிட்டங்கி, அய்யர்மலை |
| 2) | மளிகை பொருட்கள் | = | கரூர் மாவட்ட மொத்த கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலை YH.159, கரூர். |
| 3) | எரிவாயு உருளைகள் | = | ஸ்ரீமூகாம்பிகை கேஸ் ஏஜென்சீஸ், குளித்தலை. |
| 4) | பால் | = | ஜி.யுவராணி, 39/50, பழையகோர்ட்தெரு, குளித்தலை. |
| 5) | காய்கள் விநியோகம் | = | திருமதி.ஜி.யுவராணி, 39/50, பழையகோர்ட்தெரு, குளித்தலை. |
| 6) | அம்மா உணவகத்தில் பணிபுரியும் ஸ்ரீசாய்ராம் மகளிர் சுயஉதவி குழு பணியாளர்களுக்கு மாத ஊதியம் | | |
| 7) | மின்கட்டணம் மற்றும் பொருட்கள் ஏற்றிவரும் வண்டி வாடகை மற்றும் இதர செலவினங்கள். | | |
| 8) | உணவு விநியோகம் டோக்கன்கள் அச்சடித்தல் தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம், திருச்சிராப்பள்ளி. | | |

அலுவலக குறிப்பு– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவினம் மன்ற அனுமதியை எதிர்நோக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று செலவின தொகை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மேற்படி உத்தேச செலவினம் ரூ.55.00 லட்சம், பொது நிதியின்கீழ் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1083/2014/இ1)

..3..

பொருள்– 07. குளித்தலை நகராட்சியின் நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலைய ஜெனரேட்டர் பழுதினை நீக்கம் செய்வதற்கு ரூ.2.30 லட்சம், நகர்மன்ற தீர்மான எண்.196, நாள்–03.10.2017.ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 13.12.2017.ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், பெறப்பட்ட கீழ்க்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டில் சதவீதம் |
|---|---|---|---|
| 1) | நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலைய 45KVA ஜெனரேட்டர் பழுது சரிபார்த்தல். | 1). திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.10 % குறைவு |
| | | 2) திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 1.11 % அதிகம் |

அலுவலக குறிப்பு– வரிசை எண்.1.ல் ஆன திரு.M.செந்தில்குமார் ஒப்பந்ததாரரின் 0.10% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.2498/2017/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.அ.வ.சையத் முஸ்தபா கமால் அவர்கள், அலுவலக பணி நிமித்தமாக கீழ்க்கண்டவாறு வெளியூர் சென்றுவந்தமைக்கு பயணப்படி தொகை ரூ.10,520/– வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பயண தேதி | பயண ஊர் | பயணத்தின் காரணம் | பயணப்பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | 27.11.2017 | சென்னை | Animaters & Supervisior தொடர்பான ஆய்வுக்கூட்டம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை. | 2630.00 |
| 2) | 08.01.2018 | சென்னை | 14th CFC தொடர்பான ஆய்வுக்கூட்டம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை. | 2630.00 |
| 3) | 02.03.2018 | சென்னை | IHSL, SWM, SBM தொடர்பான ஆய்வுக்கூட்டம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை. | 2630.00 |
| 4) | 13.03.2018 | சென்னை | கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை பெற்றுத்தர, சென்னை மாநகராட்சி அம்மா மாளிகை, சென்னை. | 2630.00 |
| | | | மொத்தம் | 10520.00 |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1343/2017/அ1)

பொருள்– 09. இந்நகராட்சி பேருந்து நிலைய இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் தீ விபத்து தொடர்பாக நடைபெற்று முடிந்த வழக்கு எண். O.S.1/10 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை மற்றும் A.S.6/15 சார்பு நீதிமன்ற வழக்குகள் Degree Copy. Judgement Copy. Memo ஆகியவை மேல்முறையீடு, மதுரை நீதிமன்றத்தில் 2 Copy செய்ய பெற்று பெற்றுதந்தமைக்கான செலவினத் தொகை ரூ.2,000/–ம் திரு.கே.காஜாமொய்தீன்,அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2834/2009/அ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவிற்கு தேவையான அடிபம்ப் உபகரணங்கள், ஆழ்குழாய் கிணறு கைபம்புகளை பராமரிக்க தேவைப்படுகிறது. அதற்குரிய உத்தேச மதிப்பீட்டின்படி ரூ.2.00 லட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.668/2018/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள துருப்பிடித்த தள்ளுவண்டிகள், துருபிடித்த பழைய இரும்புகள், துருபிடித்த பழைய தகரங்கள் உபயோகத்திற்கு பயனற்றதால் அதனை அப்புறப்படுத்த 9.3.2018ம் தேதியன்று பொது ஏலம் கோரப்பட்டது. மேற்படி ஏலத்தில் கீழ்கண்டவர்கள் கலந்துகொண்டு கேட்கப்பட்ட உயர்ந்த கேள்வி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | உயர்ந்த ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1) | கிருஷ்ணா ஏஜென்சீஸ், 15,புதுத்தெரு, மண்ணச்சநல்லூர், திருச்சி–5 | ரூ.24500/– |
| 2) | அப்துல்லா ஏஜென்சீஸ், மைலம்சந்தை, திருச்சி–8. | ரூ.27000/– |
| 3) | ஹரிணி ஏஜென்சீஸ், 24/8D3, செட்டிக்குளத்தெரு, நாமக்கல். | ரூ.27500/– |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட மூன்று ஏலக்கேள்விகளில் ரூ.27500/–க்கு உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ள ஹரிணி ஏஜென்சீஸ் நாமக்கல் என்பவரின் ஏலக்கேள்வியை ஏற்கலாம். மேலும் பொது சுகாதார நலன்கருதி அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பொருள்களை அப்புறப்படுத்த பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.416/2018/எச்1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி செய்ய நகராட்சி நிர்வாக இயக்குனர் ந.க.எண்.38162/பி3/2014 நாள்–22.1.2015–ல் அனுமதி அளிக்கப்பட்டு 1.8.2015–ல் ரிலையன் ஃபெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிட் சென்னை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு அளிக்கப்பட்டு தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக துப்புரவு பணி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் வரும் 31.07.2018–ல் பணிகாலம் முடிவடைய உள்ளது. எனவே இந்நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் ஓய்வுபெற்றும், இறந்துவிட்ட காரணத்தால் துப்புரவு பணியாளர்கள் குறைவாக இருப்பதினால் தொடாந்து 52 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 01.08.2018 முதல் பணி செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு இந்நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் துப்புரவு பணியாளர்மூலம் தொடர்ந்து துப்புரவு பணிசெய்ய புதுப்பிப்பதற்க்கு செயற்குறிப்பு அனுப்புவதற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தரவிலைப்பட்டியல்படி தினக்கூலி வழங்க இந்நகராட்சி பொது நிதியிலிருந்து (or) திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.855/2018/எச்1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சியின் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் பெரியார்நகர், நாப்பாளையம் பகுதிகளில் உள்ளது. அவற்றை சுத்தம் செய்வதற்கு மற்றும் மழைகாலங்களில் பயன்படுத்தவும் ஓராண்டிற்கு (2018–2019) தேவையான 2 டன் பிளீச்சிங் பவுடர் வாங்க ரூ.90,000/– செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2934/2015/இ1)

பொருள்– 14. குளித்தலை நகராட்சி பகுதிகளில் 19 இடங்களில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மினி பம்ப் பொருத்தி குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. 23 இடங்களில் உள்ள கழிப்பிடங்களுக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து மினிபம்ப் பொருத்தி தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. அவற்றில் பழுதடைந்த மின்மோட்டார்களை பழுது பார்க்கவும், புதிய மின்மோட்டார் பொருத்தவும், வருடாந்திர பராமரிப்பிற்கான ரூ.6.00 லட்சம் உத்தேச மதிப்பீடு செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.847/2018/இ1)

..5..

பொருள்– 15. குளித்தலை நகராட்சியால் விநியோகம் செய்யப்படும் குடிநீர் தர பரிசோதனை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மூலம் மேற்கொள்ள வேண்டி உள்ளது. அதற்குரிய ஓராண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1066/2018/இ1)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி பகுதிகளில் மழைகாரணமாக பழுது ஏற்பட்டும் (ம) குடிநீர் குழாய் பழுதுபார்க்க பறிக்கப்பட்ட தார்சாலையை பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.5.00 லட்சம் உத்தேச செலவின மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.504/2018/இ1)

பொருள்– 17. குளித்தலை நகராட்சிப் பகுதிகளில் இயற்கை சீற்றங்களால் பழுது ஏற்பட்டும், குடிநீர் குழாய் பழுது பார்ப்புக்காக பறிக்கப்பட்ட சிமெண்ட் சாலைகளை பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டிலான உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.505/2018/இ1)

பொருள்– 18. குளித்தலை நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்குரிய 2009.ஆம் ஆண்டில் வாங்கிய ஜெராக்ஸ் மெசின் பழுதடைந்து உள்ளது. எனவே, புதியதாக ஸ்கேனர்உடன் கூடிய ஜெராக்ஸ் மெசின் வாங்க உத்தேச செலவினம் ரூ.2,35,000/– மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.848/2018/இ1)

பொருள்– 19. குளித்தலை நகராட்சி அலுவலக வளாகத்தில் கண்காணிப்பு கேமராக்களில் பழுது ஏற்பட்டு இயங்காமல் உள்ளது. அவற்றை பழுதுபார்க்க உத்தேச செலவினம் ரூ.62,000/– மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.633/2018/இ1)

பொருள்– 20. குளித்தலை நகராட்சி பெரியார்நகர் தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக 33HP மின்மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி மின்மோட்டாரினை இயக்குவதற்கு 16 Sq.mm 140 மீட்டர் Copper Cable தேவைப்படுகிறது. அதற்கான உத்தேச மதிப்பீடு 1.00 லட்சம் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.861/2018/இ1)

பொருள்– 21. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கில் மண்புழு உரம் தயாரிக்கும் செட் மற்றும் வின்ட்ரோஸ் செட் கூரைகள் பழுது ஏற்பட்டு உள்ளது. மேலும், வடபுறம் சுற்றுசுவர் பழுது ஏற்பட்டு உள்ளது. அவற்றை பராமரிப்பு பணிகள் செய்வதற்கு ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டிலான உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.862/2018/இ1)

பொருள்– 22. குளித்தலை நகராட்சி பகுதியிலான காவேரிநகர் சிறுவர் பூங்காவில் மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் அமைக்க ரூ.2.50 லட்சம் உத்தேச மதிப்பீட்டு செலவினத்திற்கும், மேற்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.997/2018/இ1)

பொருள்– 23. இந்நகராட்சிக்கு சொந்தமான நாப்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாக கடை எண்.1, 2, 3 மற்றும் ஆண்டார் மெயின்ரோடு தரைத்தளம் தினசரி நாளங்காடி கடை ஒன்பது ஆண்டுகள் முறையே 18.11.2016 மற்றும் 28.02.2017.ல் முடிவடைந்ததால், நாப்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாக கடை எண்.1, 2, 3.க்கு மாதம் தலா ரூ.3000/–மும், மற்றும் ஆண்டார்மெயின்ரோடு தரைத்தளம் தினசரி நாளங்காடி கடைக்கு தலா ரூ.5000/–ம் என, ஒரு மாத வாடகையாக, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் ந.க.எண்.4162/2016/அ3, நாள்–15.02.2017.ன்படி கண்காணிப்புக்குழுவால் வாடகை மறுநிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி வாடகை மறுநிர்ணயம் செய்த நாள்முதல் 2017–2018.ஆம் ஆண்டுவரை நிலுவையின்றி வசூல் செய்து முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் ஒப்புதல் செய்யலாம்.
(ந.க.எண்.1906/2016/அ1)

பொருள்– 24. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-X-0031 என்ற எண்ணுள்ள குப்பைலாரி பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கு பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தகுதிச்சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம்ரூ.140000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.750/2018/எச்1)

பொருள்– 25. இந்நகராட்சி ஆணையர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக வேலையின் காரணமாக அவ்வப்போது வெளியூர் சென்றுவர 2018–2019.ம் நிதியாண்டுக்கு பயணப்படிபட்டியல் தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1245/2018/அ1)

பொருள்– 26. இந்நகராட்சிமீது தொடரப்படும் வழக்குகளில், இந்நகராட்சி சார்பாக ஆஜராகும், குளித்தலை, கரூர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்குகளுக்கும், வழக்கறிஞர் கட்டணம் 2018–2019.ம் நிதியாண்டுக்கு வழங்க உத்தேச தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1246/2018/அ1)

பொருள்– 27. இந்நகராட்சி பணிகள், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் சார்பாக நாளிதழ்களில் விளம்பரம் செய்ய 2018–2019.க்கான நிதியாண்டுக்கு விளம்பர பிரசுரக்கட்டணம் வழங்க உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1247/2018/அ1)

பொருள்– 28. குளித்தலை நகராட்சி அலுவலக ஜெனரேட்டருக்கு 2018–2019.ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்வதற்கு ரூ.1.00 லட்சம் உத்தேச செலவின மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.966/2018/இ1)

பொருள்– 29. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு வாகனங்கள் TN-47-E-0264, TN-47-X-3173 ஆகியவற்றிற்கு தகுதிச்சான்று பணிகள் மற்றும் அவ்வப்போது ஏற்படும் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான 2018–2019.ம் ஆண்டிற்கு தேவையான உத்தேச செலவின மதிப்பீடு ரூ.3.00 லட்சம் ஆகம். குடிநீர் பிரிவின் அவசர அவசியம் கருதி, அவ்வப்போது பணிகள் மேற்கொள்ளவும், செலவினத்தற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.966/2018/இ1)

பொருள்– 30. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு தலைமை நீரேற்று நிலையம், பெரியார்நகர், நாப்பாளையம் ஆகியவற்றிலான ஜெனரேட்டர்களுக்கு 2018–2019.ம் ஆண்டில் பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்ய உத்தேச செலவின மதிப்பீடு ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.966/2018/இ1)

பொருள்– 31. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு வாகனங்கள் TN-47-E-0264, TN-47-X-3173 மற்றும் குடிநீர் தலைமை நீரேற்று நிலையங்கள் பெரியார்நகர், நாப்பாளையம் ஆகியவற்றின் ஜெனரேட்டர்கள், அலுவலக ஜெனரேட்டர் ஆகியவற்றிற்கு 2018–2019.ம் ஆண்டிற்கு தேவையான டீசல் செலவின உத்தேச மதிப்பீடு ரூ.9.00 லட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). குடிநீர் பிரிவுக்கான டீசல் செலவினத்தைகுடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). அலுவலக ஜெனரேட்டர் டீசல் செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.966/2018/இ1)

பொருள்– 32. குளித்தலை நகராட்சி அருள்மிகு மாரியம்மன்கோவில் திருவிழாவிற்கு பொதுமக்கள், பக்தர்கள் பயன்பாட்டிற்கு அடிப்படை வசதிகள் செய்யவேண்டியுள்ளது. காவேரி ஆற்றின் பெரியபாலம் பரிசல்துறை, மாரியம்மன்கோவில்துறை, கடம்பர்கோவில்துறை மற்றும் தேவதானம் துறை பகுதிகளில் புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து, டீசல் இன்ஜின்மூலம் தண்ணீர்வசதி செய்யவேண்டி உள்ளது. ஜெனரேட்டர்மூலம் மின்வசதி செய்தல் உள்ளிட்ட பணிகளுக்கு ரூ.2.70 லட்சம் உத்தேச செலவின மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.881/2018/இ1)

பொருள்– 33. குளித்தலை நகராட்சி அலுவலக வளாகத்தில் செயல்படும் தொலைபேசி இணைப்புகள் விபரம் கீழ்க்கண்டவாறு.
(1)–222321 = நகராட்சி அலுவலகம், (2)–222951 = ஆணையர் அறை, (3)–222961 = பொறியாளர் அறை
ஆகவே, இந்த தொலைபேசி இணைப்புகளுக்கான 2018–2019.ம் வருடத்திற்கான தொலைபேசி கட்டணம் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினத்தை பொதுநிதியில் இருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.650/2016/பி1)

பொருள்– 34. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் பழுது சரிசெய்ய ரூ.6.00 லட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பொது நிதியில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.57 / 30.03.2017.ன்படி ஒப்புதல் பெறப்பட்டது. இந்நிலையில் 21.10.2017 அன்று பொதுப்பணித் துறையின் புதியதரப்படுத்தப்பட்ட விலைவிகித பட்டியல் அமலுக்கு வந்த காரணத்தால்,மேற்கண்ட பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.6.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிய நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.574/2017/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

12.02.2018.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 53 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 54 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 3 | 3 | 55 | பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 56 | பதிவு செய்யப்பட்டது. |
| 5 | 5 | 57 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | 6 | 58 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 7 | 7 | 59 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 8 | 8 | 60 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 61 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | 10 | 62 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 63 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 64 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 65 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 66 | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 15 | 67 | அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 68 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 17 | 17 | 69 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 18 | 18 | 70 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 19 | 19 | 71 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 20 | 20 | 72 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 21 | 21 | 73 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 22 | 22 | 74 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 23 | 23 | 75 | ஒப்புதல் செய்யப்பட்டது. |
| 24 | 24 | 76 | அனுமதிக்கப்பட்டது. |
| 25 | 25 | 77 | அனுமதிக்கப்பட்டது. |
| 26 | 26 | 78 | அனுமதிக்கப்பட்டது. |
| 27 | 27 | 79 | அனுமதிக்கப்பட்டது. |
| 28 | 28 | 80 | அனுமதிக்கப்பட்டது. |
| 29 | 29 | 81 | அனுமதிக்கப்பட்டது. |
| 30 | 30 | 82 | அனுமதிக்கப்பட்டது. |
| 31 | 31 | 83 | அனுமதிக்கப்பட்டது. |
| 32 | 32 | 84 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 33 | 33 | 85 | அனுமதிக்கப்பட்டது. |
| 34 | 34 | 86 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.